# JP-2-17

This booklet contains 20 pages.
इस पुस्तिका में 20 पृष्ठ हैं ।

**PAPER II / प्रश्न-पत्र II**
**Tamil Language Supplement**
**तमिल भाषा परिशिष्ट**
**PART IV & V / भाग IV & V**

**Test Booklet Code**
**परीक्षा पुस्तिका संकेत**

**P**

**Test Booklet No.**
**परीक्षा पुस्तिका संख्या**

690197

**Do not open this Test Booklet until you are asked to do so.**
**इस परीक्षा पुस्तिका को तब तक न खोलें जब तक कहा न जाए ।**
**Read carefully the Instructions on the Back Cover (Page 19 & 20) of this Test Booklet.**
**इस परीक्षा पुस्तिका के पिछले आवरण (पृष्ठ 19 व 20) पर दिए निर्देशों को ध्यान से पढ़ें ।**

**For instructions in Tamil see Page 2 of this Booklet. / तमिल में निर्देशों के लिए इस पुस्तिका का पृष्ठ 2 देखें ।**

## *INSTRUCTIONS FOR CANDIDATES*

1. This booklet is a supplement to the Main Test Booklet for those candidates who wish to answer **EITHER** Part IV (Language I) **OR** Part V (Language II) in **TAMIL** language, but **NOT BOTH.**
2. Candidates are required to answer Part I and Part II **OR** III from the Main Test Booklet and Parts IV and V from the languages chosen by them.
3. Questions on English and Hindi languages for Part IV and Part V have been given in the Main Test Booklet. Language Supplements can be asked for separately.
4. Use **Blue / Black Ball Point Pen only** for writing particulars on this page / marking responses in the Answer Sheet.
5. The CODE for this Language Booklet is **P.** Make sure that the CODE printed on **Side-2** of the Answer Sheet and on your Main Test Booklet is the same as that on this Language Supplement Booklet. In case of discrepancy, the candidate should immediately report the matter to the Invigilator for replacement of the Language Supplement Test Booklet.
6. This Test Booklet has **two** Parts, IV and V, consisting of **60** Objective Type Questions, each carrying 1 mark :
   Part-IV : Language I - (Tamil) (Q. 91 to Q. 120)
   Part-V : Language II - (Tamil) (Q. 121 to Q. 150)
7. Part-IV contains 30 questions for Language-I and Part-V contains 30 questions for Language-II. In this Test Booklet, only questions pertaining to Tamil language have been given. **In case the language/s you have opted for as Language-I and/or Language-II is a language other than Tamil, please ask for a Test Booklet that contains questions on that language. The languages being answered must tally with the languages opted for in your Application Form.**
8. **Candidates are required to attempt questions in Part -V (Language-II) in a language other than the one chosen as Language-I (in Part-IV) from the list of languages.**
9. Rough work should be done only in the space provided in the Test Booklet for the same.
10. The answers are to be recorded on the OMR Answer Sheet only. Mark your responses carefully. No whitener is allowed for changing answers.

## परीक्षार्थियों के लिए निर्देश

1. यह पुस्तिका मुख्य परीक्षा पुस्तिका की एक परिशिष्ट है, उन परीक्षार्थियों के लिए जो या तो भाग IV (भाषा I) **या** भाग V (भाषा II) **तमिल** भाषा में देना चाहते हैं, लेकिन **दोनों नहीं** ।
2. परीक्षार्थी भाग I एवं भाग II **या** III के उत्तर मुख्य परीक्षा पुस्तिका से दें और भाग IV व V के उत्तर उनके द्वारा चुनी भाषाओं से ।
3. अंग्रेज़ी व हिन्दी भाषा पर प्रश्न मुख्य परीक्षा पुस्तिका में भाग IV व भाग V के अन्तर्गत दिए गए हैं । भाषा परिशिष्टों को आप अलग से माँग सकते हैं ।
4. इस पृष्ठ पर विवरण अंकित करने एवं उत्तर पत्र पर निशान लगाने के लिए **केवल नीले/काले बॉल पॉइंट पेन** का प्रयोग करें ।
5. इस भाषा पुस्तिका का **संकेत** है **P** । यह सुनिश्चित कर लें कि इस भाषा परिशिष्ट पुस्तिका का संकेत, उत्तर पत्र के **पृष्ठ-2** एवं मुख्य परीक्षा पुस्तिका पर छपे संकेत से मिलता है । अगर यह भिन्न हो तो परीक्षार्थी दूसरी भाषा परिशिष्ट परीक्षा पुस्तिका लेने के लिए निरीक्षक को तुरन्त अवगत कराएँ ।
6. इस परीक्षा पुस्तिका में **दो** भाग IV और V हैं, जिनमें **60** वस्तुनिष्ठ प्रश्न हैं, जो प्रत्येक 1 अंक का है :
   भाग-IV : भाषा I - (तमिल) (प्र. 91 से प्र. 120)
   भाग-V : भाषा II - (तमिल) (प्र. 121 से प्र. 150)
7. भाग-IV में भाषा-I के लिए 30 प्रश्न और भाग-V में भाषा-II के लिए 30 प्रश्न दिए गए हैं । इस परीक्षा पुस्तिका में केवल तमिल भाषा से संबंधित प्रश्न दिए गए हैं । **यदि भाषा-I और/या भाषा-II में आपके द्वारा चुनी गई भाषा(एँ) तमिल के अलावा है तो कृपया उस भाषा वाली परीक्षा पुस्तिका माँग लीजिए । जिन भाषाओं के प्रश्नों के उत्तर आप दे रहे हैं वह आवेदन पत्र में चुनी गई भाषाओं से अवश्य मेल खानी चाहिए ।**
8. **परीक्षार्थी भाग-V (भाषा-II) के लिए, भाषा सूची से ऐसी भाषा चुनें जो उनके द्वारा भाषा I (भाग-IV) में चुनी गई भाषा से भिन्न हो ।**
9. रफ कार्य परीक्षा पुस्तिका में इस प्रयोजन के लिए दी गई खाली जगह पर ही करें ।
10. सभी उत्तर केवल OMR उत्तर पत्र पर ही अंकित करें । अपने उत्तर ध्यानपूर्वक अंकित करें । उत्तर बदलने हेतु श्वेत रंजक का प्रयोग निषिद्ध है ।

SEAL

Name of the Candidate (in Capitals) : ____________________
परीक्षार्थी का नाम (बड़े अक्षरों में) :
Roll Number : in figures ____________________
अनुक्रमांक : अंकों में
: in words ____________________
: शब्दों में
Centre of Examination (in Capitals) : ____________________
परीक्षा केन्द्र (बड़े अक्षरों में) :
Candidate's Signature : ____________ Invigilator's Signature : ____________
परीक्षार्थी के हस्ताक्षर : निरीक्षक के हस्ताक्षर :
Facsimile signature stamp of
Centre Superintendent ____________________

P P

இந்த நூற்கட்டு 20 பக்கங்கள் கொண்டது **JP-2-17**

தேர்வு நூற்கட்டு சங்கேதக் குறியீடு **P**

# தாள் II
# தமிழ் மொழி துணை நூற்கட்டு
# பகுதி IV & V

**அவிழ்க்கச் சொல்லப்படும் வரை யாரும் இந்த நூற்கட்டை அவிழ்க்கக் கூடாது. இந்த நூற்கட்டின் பின்பக்க உறைப்பகுதியில் (பக்கம் 19 & 20) காணப்படும் வழிகாட்டுதல் குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும்.**

**தேர்வு எழுதுவோர்க்கான வழிகாட்டும் குறிப்புகள்**

1. இந்நூற்கட்டு முக்கிய தேர்வு நூற்கட்டுக்காண இணைப்பாகும். இது பகுதி IV (மொழி I) **அல்லது** பகுதி V க்கு (மொழி II) **தமிழ்** மொழியில் விடையளிக்க விரும்புவோர்க்கு மட்டுமே உரியது. **இரண்டிற்கும் உரியது அல்ல.**
2. தேர்வு எழுதுவோர் முக்கிய தேர்வு நூற்கட்டின் பகுதி I & பகுதி II **அல்லது** III க்கும் அவர்கள் தேர்ந்தெடுத்த மொழிகளின் பகுதி IV, V ஆகியவற்றிற்கும் விடை அளிக்கவும்.
3. ஆங்கிலம் மற்றும் ஹிந்தி மொழிகளின் பகுதி IV மற்றும் பகுதி V ற்கான வினாக்கள் முக்கிய தேர்வு நூற்கட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. மொழி இணைப்பைத் தனியாக வாங்கிக் கொள்ள வேண்டும்.
4. இப் பக்கத்தில் வினவப்படும் உரிய விவரங்களை/விடைத்தாளில் நீர் மேற்கொள்ளும் பதில் வினையை **நீலம்/கறுப்பு மை பந்துருள்முனைப் பேனாவினால் மட்டும் நிரப்புக.**
5. இந் நூற்கட்டின் சங்கேதக் குறியீடு P ஆகும். இந் நூற்கட்டின் மீதும் இதன் **பக்கம் 2-லும்** அச்சாகி உள்ள சங்கேதக் குறியீடுகள் இரண்டும் ஒன்றே தானா என்பதைச் சரிபார்த்து உறுதி செய்து கொள்க. மேலும் உம் தேர்வு நூற்கட்டு எண்ணும் விடைத்தாள் எண்ணும் ஒன்றேதானா என்பதையும் சரிபார்த்து உறுதி செய்துகொள்க. இவை ஒன்றோடு ஒன்று முரணாக இருக்குமேயானால் தேர்வு எழுதுபவர் இது பற்றி உடனே தேர்வு மேற்பார்வையாளர் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். வேறொரு தேர்வு நூற்கட்டு மற்றும் வேறொரு விடைத்தாள் ஆகிய இரண்டையும் அவற்றிற்குப் பதிலாகக் கேட்டுப் பெற வேண்டும்.
6. இது தேர்வு நூற்கட்டு 2 பகுதிகள் கொண்டது. ஒரே ஒரு மதிப்பெண் நேரிய **60** பல் விடை வினாக்கள் கொண்ட இப்பகுதிகள் முறையே IV & V என்றவாறாக அமையும்.
   பகுதி IV: மொழி - I (தமிழ்) (வினாக்கள் 91 முதல் 120 வரை)
   பகுதி V: மொழி - II (தமிழ்) (வினாக்கள் 121 முதல் 150 வரை)
7. பகுதி IV இல் மொழி I க்கும், பகுதி V இல் மொழி II க்கும் தலா **30** வினாக்கள். இத் தேர்வு நூற்கட்டில் தமிழ் மொழிகளுக்குரிய வினாக்கள் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன. இத்தேர்வு நூற்கட்டில் தமிழ் மொழிக்கான வினாக்கள் மட்டுமே உள்ளன. **தமிழ் மொழி நீங்கப் பிறமொழி எதனையேனும் மொழி I & II க்கு நீர் தெரிவு செய்திருப்பின் அம்மொழிக்குரிய வினாக்கள் கொண்ட தேர்வு நூற்கட்டைக் கேட்டுப் பெறவும். நீர் தேர்வு விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள மொழி தேர்ந்தெடுப்பும், தேர்வு நூற்கட்டில் எழுதியுள்ள விடை மொழியும் ஒன்றாகவே இருக்க வேண்டும்.**
8. **தேர்வு எழுதுவோர், மொழிகள் பட்டியருந்து தேர்ந்து கொண்ட மொழி I (பகுதி IV இல்) நீங்கலாகப் பிற வேறொரு மொழியை மொழி II (பகுதி V க்கு) தேர்ந்து கொண்டு விடையளிக்க வேண்டும்.**
9. இத் தேர்வு நூற்கட்டில் ஒதுக்கப்பட்டுள்ள முன்வரைவுப் பகுதியில் மட்டும் திருந்தாப் பதிவுகள் இடம் பெற வேண்டும்.
10. ஒ.எம்.ஆர் (OMR) விடைத்தாளில் மட்டுமே விடைகள் பதிவு செய்யப்பட வேண்டும். பதில் வினைகளைக் கவனமாகப் பதிவு செய்க. விடையைத் திருத்தம் செய்து மாற்றி எழுத வெண்ணிற மை ஏதும் பயன்படுத்தக் கூடாது.

தேர்வு எழுதுபவர் பெயர்(தலைப்பு எழுத்துகளில்) ____________________

தேர்வு வரிசை எண் : எண்ணில் ____________________

: எழுத்தில் ____________________

தேர்வு மையம் (தலைப்பு எழுத்துகளில்) ____________________

தேர்வு எழுதுபவர் கையொப்பம் ____________________

தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம் ____________________

Facsimile signature stamp of Centre Superintendent ____________________

தமிழை மொழிப்பாடம் I ஆகத் தேர்வு செய்த மாணாக்கர்கள் மட்டுமே பின்வரும் பகுதியின் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

# பகுதி IV

# மொழிப்பாடம் I
# தமிழ்

கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் கேள்விகளுக்கு (கேள்வி எண் **91** முதல் **99** வரை) மிகப் பொருத்தமான விடைகளைத் தேர்வு செய்க.

நம் இந்தியச் சமூகம் பல மொழிகளையும் பண்பாடுகளையும் பலமதங்களையும் உள்ளடக்கி உள்ளது. இந்தியாவின் ஒவ்வொரு மொழியும் தமக்கேயான அடையாளத்துடன் தமக்கான வரலாற்றைக் கொண்டுள்ளது. இந்தியாவின் பலவகைச் சமூகங்கள் தமக்கென தனித்த பண்பாட்டு அடையாளத்தைக் கொண்டிருக்கும் அதே வேளையில் இந்தியத் தன்மை கொண்ட பொது அடையாளங்கள் பலவும் காணப்படுகின்றன. மதங்கள் பல உள்ள இந்திய நாட்டில் அவற்றுக்கிடையிலான பரிமாற்றங்கள் தொடர்ந்து இருந்து வருகின்றன. முற்காலத்தில் பல நாடுகளாகவும் பல பேரரசுகளாகவும் பிரிந்து இருந்த இந்தியா நவீன கால மாற்றங்களின் வழியாக ஒரு பெரும் தேசமாக உருவானது. தமக்குள் இருந்த வேறுபாடுகளையும் முரண்பாடு களையும் களைந்து பொது நன்மை தரும் தேசியத்தின் அடிப்படையில் நாம் ஒரு தேசத்தைக் கட்டி எழுப்பினோம். இதன் அடிப்படையாக அமைந்துள்ளது இந்திய அரசியலமைப்புச் சட்டமாகும்.

நீதி, சுதந்திரம், சமத்துவம் சகோதரத்துவம் என்ற உயர்ந்த கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு நம் அரசியல் சட்டம் அமைக்கப் பட்டுள்ளது. மதம், இனம், சாதி, பாலினம், பிறப்பிடம் என்ற அடிப்படையில் யாருடைய உரிமை களும் மறுக்கப்பட மாட்டாது என்பதை உறுதி செய்துள்ள நம் அரசமைப்புச் சட்டம் தீண்டாமையை முற்றிலுமாகத் தடை செய்துள்ளதுடன் அதனைப் பேச்சிலோ செயலிலோ கடைப் பிடிப்பதைத் தண்டனைக்குரிய குற்றமாகவும் அறிவித்துள்ளது. அதன் மூலம் இந்தியச் சமூகத்தில் நிலவி வந்த பெரும் சமூகக் கொடுமை நீக்கப்பட்டுள்ளது. நம் அரசமைப்புச் சட்டத்தை வடிவமைத்த மாமேதை அம்பேத்கர் இந்தியச் சமூகத்தை நீதியின் வழி அமைந்த, சமத்துவம் உடைய சமூகமாக அமைப்பதற்கான அடிப்படைகளை உருவாக்கித் தந்துள்ளார். அதனை நம் தேசத்தின் மாபெரும் தலைவர்கள் புகழ்ந்து ஏற்றுக் கொண்டனர். அண்ணல் காந்தியின் கொள்கைகளும் இந்திய அரசியலுக்கு மாபெரும் பங்கை ஆற்றியுள்ளன. கிராம முன்னேற்றம், அனைவருக்குமான வாழ்வுரிமை, அனைவருக்குமான கல்வி என்பவை நம் நாட்டின் முக்கிய கொள்கைகளாக அமைந்துள்ளன.

பெண்களுக்கான சமஉரிமையை உறுதி செய்துள்ள நமது அரசியல் அமைப்புச் சட்டம் காலம்காலமாக இருந்து வந்த பெண்ணடிமைத் தனத்தை சட்ட வகையில் தடை செய்துள்ளது. பல வகையான

சமத்துவம், பல வகையான உரிமைகளை அளித்துள்ள நம் இந்திய அரசியல் ஒவ்வொருவருக்குமான கடமைகளையும் வரையறுத்துள்ளது. இவற்றைப் புரிந்து கொண்டு, சமூக நீதியை மதித்து நடப்பது நம் அனைவரின் கடமையாகும். ஒவ்வொருவருக்குமான மனித உரிமைகளை மதிப்பதும் சுய-மரியாதையுடன் அனைவரையும் நடத்துவதும் நவீன இந்தியச் சமூகத்தின் அடிப்படைக் கொள்கையாக அமைந்துள்ளது. இதனைப் புரிந்து கொள்ளும் போது மொழி, பண்பாடு, மதம் என்பவற்றால் நாம் வேறுபட்டு இருந்தாலும் இந்தியர் என்ற வகையில் இணைந்தவர்களாகிறோம். இதனை அனைவருக்கும் புரியவைப்பதுதான் இந்தியக் கல்வி முறையின் அடிப்படைத் தேவையாக உள்ளது.

**91.** இந்தியா ஒரு பெரும் தேசமாக உருவாகும் முன்பு எப்படியிருந்தது?

(1) பல நாடுகளாக, பல ஊர்களாக

(2) பல மொழிகளாக, பல நாடுகளாக

(3) பல நாடுகளாக, பல பேரரசுகளாக

(4) பல அரசுகளாக, பல நகரங்களாக

**92.** நாம் தேசத்தை எதன் அடிப்படையில் கட்டியெழுப்பினோம்?

(1) பொது நன்மை தரும் தேசியத்தின் அடிப்படையில்

(2) அரசியல் அடிப்படையில்

(3) சிறப்பான உரிமைகளின் அடிப்படையில்

(4) பொருளாதாரத்தின் அடிப்படையில்

**93.** நம் அரசியல் சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகள்

(1) நீதி,சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்

(2) அன்பு, அகிம்சை, அறம், அரசியல்

(3) சுதந்திரம், முன்னேற்றம், சமத்துவம், நீதி

(4) நீதி,நேர்மை,சமத்துவம்,அன்பு

**94.** தீண்டாமையை ________,________ கடைப்பிடிப்பது குற்றம்

(1) நாட்டிலோ, வீட்டிலோ

(2) ஊரிலோ,பள்ளியிலோ

(3) நகரிலோ,கிராமத்திலோ

(4) பேச்சிலோ, செயலிலோ

**95.** நம் அரசமைப்புச் சட்டத்தை வடிவமைத்த அம்பேத்கர் இந்தியச் சமூகத்தை இவற்றின் மீது கட்ட விரும்பினார்

(1) முன்னேற்றம், முற்போக்கு

(2) நீதி, சமத்துவம்

(3) விடுதலை,வேலை வாய்ப்பு

(4) நீதி, நேர்மை

96. காலம் காலமாக இருந்து வந்த பெண்ணடிமைத்தனம் தடை செய்யப்பட்டுள்ளது:

(1) அரசியல் வகையில்

(2) அறம் வகையில்

(3) நீதி வகையில்

(4) சட்ட வகையில்

97. ________ மதித்து நடப்பது நம் அனைவரின் கடமை

(1) அரசியல் கொள்கையை

(2) சமூக நீதியை

(3) பொருளாதார விதிகளை

(4) சமத்துவத்தை

98. இந்தியச் சமூகம் இவற்றை உள்ளடக்கியது:

(1) சிலமொழி,பல மதங்கள்

(2) பல மொழிகள், பல பண்பாடுகள், பல மதங்கள்

(3) பல நிலங்கள், பல அடையாளம்

(4) பல மதங்கள், இரு இனங்கள்

99. இந்தியாவின் ஒவ்வொரு மொழியும் கொண்டிருப்பவை

(1) இலக்கணம், இலக்கியம்

(2) நிலம், நாடு

(3) மக்கள், இனங்கள்

(4) அடையாளம், வரலாறு

கொடுக்கப்பட்டுள்ள கவிதையைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் கேள்விகளுக்கு (கேள்வி எண் **100** முதல் **105** வரை) மிகப்பொருத்தமான விடைகளைத் தேர்வு செய்க.

இந்தப் புவிதனில் வாழும் மரங்களும்
இன்ப நறுமலர்ப் பூஞ்செடிக் கூட்டமும்
அந்த மரங்களைச் சூழ்ந்த கொடிகளும்
ஔடத மூலிகை பூண்டுபுல் யாவையும்
எந்தத் தொழில் செய்து வாழ்வனவோ?

மானுடர் உழாவிடினும் வித்து நடாவிடினும்
வரம்பு கட்டாவிடினும் அன்றிநீர்ப்பாய்ச் சாவிடினும்
வானுலகு நீர்தருமேல் மண்மீது மரங்கள்
வகைவகையா நெற்கள் புற்கள் மலிந்திருக்குமன்றோ?
ஊனுடலை வருத்தாதீர் உணவியற்கை கொடுக்கும்
உங்களுக்குத் தொழிலிங்கே அன்புசெய்தல் கண்டீர்.

-சுப்பிரமணிய பாரதியார்

100. பூஞ்செடியில் உள்ளவை

(1) வண்ண நறுமலர்

(2) இன்ப நறுமணம்

(3) இன்ப மறுமலர்

(4) மூலிகை நறுமலர்

**101.** மரங்களைச் சூழ்ந்தவை

(1) கொடிகள்

(2) செடிகள்

(3) மூலிகை

(4) புல் பூண்டு

**102.** வரம்பு கட்டுதல் யாரால் செய்யப்படுகிறது:

(1) உழவர்களால்

(2) பெண்களால்

(3) மானுடரால்

(4) ஆண்களால்

**103.** உணவை எது கொடுக்கும்

(1) இயற்கை

(2) நெற்கள் புற்கள்

(3) வானுலகு

(4) தொழில்

**104.** மனிதரின் தொழில் எனக் கவிஞர் கூறுவது

(1) உழவு செய்தல்

(2) அன்பு செய்தல்

(3) அறம் செய்தல்

(4) ஆயுதம் செய்தல்

**105.** இந்தப் பூமியில் வாழ்பவை என கவிதை சொல்வது

(1) மனிதர், விலங்குகள், மரங்கள், பறவைகள்

(2) மரங்கள், மூலிகை, பறவைகள், மனிதர்கள்

(3) மரங்கள், செடிகள், பறவைகள், கொடிகள்

(4) மரங்கள், செடிகள், கொடிகள், பூண்டு புல்

பின்வரும் கேள்விகளுக்கு மிகச்சரியான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**106.** வாசிப்பில் சேகரித்தல் திறன் என்பது

(1) குறிப்பு எடுத்தல்

(2) பகுத்தாய்தல்

(3) புதிர்களை நீக்குதல்

(4) குறிப்புகள் தயாரித்தல்

**107.** கவனித்தல்-பேசுதல் திறன் மதிப்பீட்டுத் தேர்வின் போது நிகழும் இந்த உரையாடலைப் படிக்க. மாணவர்களை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்:

ஆசிரியர்: உனக்குப் பிடித்த விளையாட்டு பற்றி உன் நண்பனிடம் பேசு.

மாணவன் 1 : ஏன்? நாம் இருவரும் பேசக் கூடாதா?

மாணவன் 2: சரி. நான் அவளிடம் கபாடி பற்றிப் பேசலாமா

(1) மாணவன் 2 சரி, மாணவன் 1 தன் பதிலை முறையாகக் கூறவில்லை.

(2) மாணவன் 1 சரி மாணவன் 2 சரியாகப் பதில் தரவில்லை

(3) மாணவன் 1, 2 இருவரும் சரியான பதில் தந்துள்ளனர்

(4) மாணவன் 1, 2 இருவரும் தவறான பதில் அளித் துள்ளனர்

108. ஆய்வின் அடிப்படையில் பின் வருவனவற்றில் எந்த வீட்டுப் பயிற்சி மழலையர் பள்ளிக் குழந்தைகளின் படித்தறிதல் வாசித்தல் திறனை பிற்காலத்தில் மேம்படுத்த உதவுகிறது.

(1) மழலையர் பாடல்களை மனப்பாடம் செய்தல்

(2) பள்ளிக்கூடம் பற்றி குடும்பத்தினர் பேசுவது

(3) பெற்றோர் குழந்தைகளிடம் உரக்க வாசித்துக் காட்டுவது

(4) அகர வரிசையை பெற்றோர் குழந்தைகளுக்குக் கற்பிப்பது

109. உரத்து வாசிக்கும் பயிற்சியின் போது ஒரு மாணவி அச்சில் உள்ள சொல்லுக்குப் பதிலாக பொருத்தமான வேறு சொல்லை இட்டு வாசிக்கும் போது ஆசிரியர் செய்ய வேண்டியது

(1) அச்சொல்லை சரியாக மறுபடி வாசிக்கச் சொல்வது

(2) மாணவியைத் தொடர்ந்து வாசிக்க அனுமதிப்பது

(3) சரியான சொல்லை உரக்கச் சொல்லிக் காட்டுவது

(4) இரண்டு சொற்களையும் எழுதி பாடத்தில் உள்ள சொல்லை அடையாளம் காட்டும்படி மாணவியைக் கேட்பது

110. முன்பே உள்ள ஒரு பாடப்பகுதியை போலி செய்யாமல் தன் சொந்த நடையில் எழுதப்படும் எழுத்து

(1) புனைவு எழுத்து

(2) உரையாடல் (நாடகம்)

(3) படைப்பு சார்ந்த எழுத்து

(4) கடிதம்

111. கற்றல் முறையில் பின்வரும் எந்த திறன் உயர்ந்த சிந்தனை வகைப்பட்டது?

(1) நினைவு படுத்தல்

(2) புரிந்து கொள்ளுதல்

(3) மதிப்பிடுதல்

(4) பயன்படுத்தல்

112. ஒரு மொழிக்குள் உள்ள குறிப்பிட்ட குழுவினர் பேசும் மொழி

(1) ஒலிப்பு வேறுபாடு

(2) வட்டார வழக்கு

(3) ஒலி அழுத்த வேறுபாடு

(4) தொனி வேறுபாடு

**113.** பின்வருவனவற்றில் அதிக கல்வி கற்றல் அனுபவத்தைத் தருவது எது?

(1) தொலைக்காட்சி, வானொலி

(2) திரையில்தோன்றும் ஊடகம்

(3) மாதிரி வடிவங்கள் வரைபடங்கள்

(4) களப்பயணம் வழி கற்றல்

**114.** திரையரங்கில் உமக்குப் பின் வரிசையில் ஒருவர் தன் கைபேசியில் உரக்கப் பேசும் போது அவரைத் தடுக்க நினைக்கும் நீங்கள் அதை எப்படிக் கூறுவீர்கள்?

(1) சத்தம் போடாதீங்க

(2) அரங்கத்திற்குள் தயவுசெய்து கைபேசியைப் பயன்படுத்தாதீர்கள்

(3) கைபேசியை பயன்படுத்தாமல் இருக்க முடியாதா உங்களால்?

(4) உங்கள் கைபேசியை கொஞ்சம் மூடிவைக்க முடியுமா?

**115.** தூண்டுதல் தரும் எழுத்து இதில் அமையும்:

(1) வேலை மதிப்பீடு, பத்திரிகை ஆசிரியருக்குக் கடிதம்

(2) வாழ்க்கை வரலாறு, சுயசரிதம்

(3) கலைக்களஞ்சியக் கட்டுரை/விளக்கப்படங்கள்

(4) செய்திக் கட்டுரைகள்/பாட நூல்

**116.** மாணவர்களின் கூடுதல் புரிதல் திறன்களை(meta cognitive skills) வளர்க்க ஆசிரியர்கள் செய்ய வேண்டியது என்ன ?

(1) திட்டமிடப்பட்ட கேள்விகளை அளித்து மாணவர்களின் வாசிப்புக்கு வழிகாட்டுதல்

(2) தேர்ந்தெடுக்கப்பட்ட பாடப்பகுதியைப் புரிந்து கொள்ள புதிய சொற்களை மனப்பாடம் செய்ய வைத்தல்

(3) படிக்கும் போது சுயக் கேள்விகளை உருவாக்கத் தூண்டுவது, மாதிரிகளை அளிப்பது

(4) மற்றவர்களுக்கான பத்தி வாசித்து பதில் எழுதும் பயிற்சிக்கான கேள்விகளை உருவாக்க ஒவ்வொரு மாணவருக்கும் வாய்ப்பு உருவாக்கித் தருவது

117. ‘உள்ளடக்க வாக்கியம்’ என்பது இதனை விளக்குவதாக இருக்கும்

(1) கட்டுரையின் முக்கிய கருத்து

(2) கவிதை அல்லது கட்டுரையின் தலைப்பு

(3) ஒரு பத்தியின் மையக் கருத்து

(4) கட்டுரை அல்லது ஆவணம் ஒன்றின் துணைத் தலைப்பு

118. உலகை நேசிக்கவும் அமைதியான எதிகாலம் பற்றிக் கற்பனை செய்யவும் மாணவரை ஊக்கப்படுத்துவது, மாணவர் மீது அக்கறை செலுத்தி மற்றவர்கள் மேல் அவர்கள் அக்கறை கொள்ளும்படி செய்யும் கல்வி இதனுடன் உறவுடையது.

(1) தொலைநிலை

(2) கல்விப்புலம்

(3) தொழில் துறை

(4) மதிப்பீடுகள்

119. ஒரு பாடப்பகுதியில் உள்ள அறிந்த சொற்களைக் கொண்டு அறிமுகமற்ற சொற்களின் பொருளைக் கண்டறிதல் இந்த வகை திறன் சார்ந்தது

(1) கவனித்தறிதல்

(2) பேச்சுத்திறன்

(3) படித்தறிதல்

(4) எழுதுதல்

120. ஒரு செய்தித் தாளில் உள்ள ஒரு குறிப்பிட்ட விளம்பரத்தை நீங்கள் ஊன்றிப் படிக்கும் போது கையாளும் படித்தறிதல் முறை

(1) செறிவான வாசிப்பு (intensive)

(2) உள்ளீடறியும் வாசிப்பு (scanning)

(3) விரிவான வாசிப்பு (extended)

(4) தெளிந்தறியும் வாசிப்பு (skimming)

**தமிழை மொழிப்பாடம் II** ஆகத் தேர்வு செய்த மாணாக்கர்கள் மட்டுமே பின்வரும் பகுதியின் வினாக்களுக்கு விடையளிக்கவும்.

# பகுதி V

# மொழிப்பாடம் II

# தமிழ்

கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் கேள்விகளுக்கு (கேள்வி எண் **121** முதல் **129** வரை) மிகப் பொருத்தமான விடைகளைத் தேர்வு செய்க.

கூத்து என்னும் சொல் முதலில் நடனத்தையும், பின்பு கதை தழுவி வரும் கூத்தாகிய நாடகத்தையும் குறித்தது. இயற்றமிழைப் புலவரும், இசைத் தமிழைப் பாணரும் பேணி வளர்த்தாற் போலவே நாடகத்தையும் நடனத்தையும் கூத்தர் என்பவர் பேணி வளர்த்தனர். நடனம் ஆடும் மகளிர் விறலியர் எனப்பட்டனர் ; உள்ளக் குறிப்புப் புறத்தில் தோன்றும்படி திறம்பட நடிப்பவள் விறலி எனப்பட்டாள். கூத்தி, ஆடுமகள், ஆடுகள மகள் என நடனமாடிய மகள் சங்க காலத்தில் பல பெயர்களைப் பெற்றிருந்தாள். நடனமாடிய மகன் கூத்தன், ஆடுமகன், ஆடுகள மகன் என்று பெயர் பெற்றான். இவர்களே கதை தழுவி வரும் கூத்துக்களை ஆடினர். அங்ஙனம் ஆடிய பொழுது ஆண் மகன் 'பொருநன்' என்றும் பெயர் பெற்றான்.

கூத்து அல்லது நாடகம் என்பது நுண்கலைகளுள் ஒன்றாகும். வெளிநாடுகளுடன் பன்னெடுங் காலமாக வாணிகம் செய்து வந்த தமிழர்-இயல், இசைக் கலைகளில் வல்லராயிருந்த தமிழர்-நாடகக் கலையிலும் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தனர் என்று கொள்வது தவறாகாது. இயல், இசை என்னும் இரண்டு பிரிவுகளும் கேட்பவருக்கு இன்பத்தைத் தருவன ; நாடகம் கேள்வி இன்பத்தோடு காட்சி இன்பமும் பயப்பதாகும். எனவே, நாடகமே மிக்க பயனுள்ளதாக அறிவுடையோர் கருதுவர். நாடகத்தில் இயல், இசை ஆகிய இரண்டும் கலக்கின்றன. நாடகத்தில்தான் முத்தமிழையும் ஒருங்கே காண இயலும்.

**121.** கூத்தர் பேணிவளர்த்தவை

(1) இசை, நடனம்

(2) நாடகம், இசை

(3) நாடகம், நடனம்

(4) நடனம், பாடல்

**122.** விறலியர் என்போர்

(1) பாடல் புனையும் மகளிர்

(2) நடனம் ஆடும் மகளிர்

(3) நடனம் ஆடும் ஆடவர்

(4) கூத்து நடத்தும் குழுவினர்

**123.** கூத்தனின் வேறு பெயர்

(1) பாணன், புலவன்

(2) ஆடுமகன், இசைக்கலைஞன்

(3) ஆடுகள மகன், பாடுகள மகன்

(4) ஆடுமகன், ஆடுகள மகன்

124. கதை தழுவிய கூத்தை ஆடிய ஆண் மகன்
(1) பொருநன்
(2) பெறுநன்
(3) கூத்தன்
(4) ஆடு மகன்

125. கேட்போருக்கு இன்பத்தைத் தருவன :
(1) ஆடல், பாடல்
(2) இயல், இசை
(3) இயல், கூத்து
(4) இசை, ஓவியம்

126. முத்தமிழும் ஒருங்கே உள்ளது :
(1) இலக்கியத்தில்
(2) காப்பியத்தில்
(3) திரைப்படத்தில்
(4) நாடகத்தில்

127. கூத்து என்ற சொல்லின் தொடக்ககாலப் பொருள்
(1) நாடகம்
(2) இசைத்தமிழ்
(3) நடனம்
(4) கதை

128. இசைத்தமிழைப் பேணி வளர்த்தோர்
(1) பாணர்
(2) புலவர்
(3) கூத்தர்
(4) மகளிர்

129. தமிழர் நெடுங்காலமாக ________ வாணிகம் செய்து வந்தனர்
(1) சீனத்துடன்
(2) வெளிநாடுகளுடன்
(3) உள் நாடுகளில்
(4) சந்தைகளில்

கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் கேள்விகளுக்கு (கேள்வி என் **130** முதல் **135** வரை) மிகப்பொருத்தமான விடைகளைத் தேர்வு செய்க.

சென்ற நூற்றாண்டின் இறுதியில் தோன்றி இந்த நூற்றாண்டில் மறைந்த இரண்டு பெரும் புலவர்கள் தமிழுக்கு ஆக்கத்தை அளித்துப் புகழ் படைத்தனர். ஒருவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் ; மற்றொருவர் மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாத ஐயரவர்கள். பாரதியார் அற்புதமான புதிய கவிதைகளைப் பாடித் தமிழ் மகளை அலங்கரித்தார். ஐயர்வர்களோ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தோன்றிய சங்க நூல்களையும் வேறு பழைய காவியங்களையும் கண்டெடுத்து ஆராய்ந்து அருமையான முறையில் பதிப்பித்து உதவினார்கள். அந்த நூல்களால் உலகம் முழுவதும் தமிழின் தொன்மையையும் பெருமையையும் பண்டைத் தமிழ் நாகரிகத்தையும் தெரிந்து கொண்டது. வெவ்வேறு நாடுகளில் உள்ள பேரறிஞர்கள் தமிழில் ஈடுபட்டு ஆராய்ச்சி செய்யலானார்கள். அதன் பயனாக உலகத் தமிழ் மாநாடுகள் நடைபெற்றன, இனியும் நடைபெறும்.

கம்பராமாயணம், வில்லி பாரதம் போன்ற நூல்களோடு நின்றிருந்த தமிழ் இலக்கியத்தின் விரிவு புலப்பட்டது. இவ்வளவு பழைய காலத்திலே தமிழ் நாட்டின் நாகரிகம் இத்தகைய சிறப்புடன் இருந்தது பெரு வியப்புக்குரியது என்று பலரும்

பாராட்டினார்கள். தொன்மையான நூல்களாக இருந்தாலும் சங்க நூல்கள் இன்றும் கற்பவர்களுக்கு இனியனவாய் உள்ளன.

இத்தகைய சங்க நூல்களைக் கண்டெடுத்து உதவிய டாக்டர் ஐயர் உரைநடையிலும் பல நூல்களை எழுதினார். அவர் பதிப்பித்த மணிமேகலைக்கு அங்கமாக மணிமேகலைக் கதைச் சுருக்கத்தையும், புத்தர், சங்கம், தர்மம் என்னும் மும்மணிகளைப் பற்றியும் எழுதினார். பெருங்கதைக்கு அங்கமாக உதயணன் சரித்திரத்தை எழுதினார்.

**130.** தமிழ் நூல்களால் உலகம் முழுவதும் இவற்றைத் தெரிந்து கொண்டது

(1) தமிழின் தொன்மை, பெருமை, பண்டைத்தமிழ் நாகரிகம்

(2) தமிழின் இனிமை, இலக்கியம், பெருமை, வளமை

(3) தமிழின் இசை, இலக்கியம், நாடகம், பழமை

(4) நாடகம், நடனம், இசை, தமிழின் சிறப்பு

**131.** தமிழ் மகளை பாரதியார்______ அலங்கரித்தார்

(1) நூல்களை பதிப்பித்து

(2) இசையைத் தந்து

(3) கவிதைகளைப் பாடி

(4) அணிகளைச் செய்து

**132.** சங்க நூல்களுடன் உ.வே.சா. இவற்றையும் கண்டெடுத்தார் :

(1) அற இலக்கியங்களை

(2) வில்லி பாரதம், கம்ப ராமாயணம்

(3) தமிழ் நாகரிகம்

(4) பழைய காவியங்கள்

**133.** மணிமேகலைக்கு அங்கமாக எழுதப்பட்டது :

(1) புத்தர், பெருங்கதை

(2) உதயணன் சரித்திரம்

(3) சிலப்பதிகாரம்

(4) மணிமேகலைக் கதைச் சுருக்கம்

**134.** மும்மணிகள் எனப்படுவன

(1) மணிமேகலை, சிலப்பதிகாரம், சிந்தாமணி

(2) அன்பு,அறம்,அழகு

(3) புத்தர்,சங்கம்,தர்மம்

(4) சங்கம்,சங்கீதம்,சாதகம்

**135.** தமிழுக்கு ஆக்கத்தை அளித்துப் புகழ் படைத்த இருவர்

(1) புலவர், மகாகவி

(2) சுப்பிரமணிய பாரதியார், உ. வே.சாமிநாத ஐயர்

(3) நடிகர், நடிகையர்

(4) வணிகர், வள்ளல்கள்

136. ஒரு தொடக்கக்கல்வி ஆசிரியர் மாணவரின் கவனித்தறிதல் திறனை வளர்க்க சிறப்பாகச் செய்ய வேண்டியது

(1) தின்சரிக் கல்வியில் ஒரு குறிப்பிட்ட கவனித்தறிதல் பயிற்சியை இணைத்து விடுதல்

(2) படிக்கும் போது இடையில் நிறுத்தி மாணவரை திரும்பச் சொல்ல வைத்தல்

(3) மாணவர்கள் பேசும்போது உன்னிப்பாகக் கவனிப்பது

(4) மாணவர்கள் கேட்பதைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கும்படி அடிக்கடி நினைவூட்டுவது

137. ஒரு ஆசிரியரின் வகுப்பில் பல்வேறு மொழியைச் சேர்ந்த மாணவர்கள் உள்ளனர். மாணவர்களுக்கு கூடுதலாக உதவி செய்யும் வகையில் எளிய வாக்கியங்களில் சொற்களின் ஒலிப்பு முறைக்கு அழுத்தம் தந்து உடல் அசைவுகளை அவற்றிற்கு ஏற்றது போல் இணைத்துப் பேசுவது அவரது பழக்கம். அவரது கற்பித்தல் முறை எந்த திறனை இலக்காக வைத்து அமைந்துள்ளது ?

(1) ஓசையொழுங்கு முறை

(2) பொருண்மை பயன் முறை

(3) ஒலியியல் விழிப்புணர்வு முறை

(4) சொல்லியல் முறை

138. மற்றவருடன் முறையான புரிந்துணர்வுடன் கருத்தைப் பரிமாற்றம் செய்யும் இயல்பு _______ அறிவுத்திறன் எனப்படும்

(1) இடம் சார்ந்த

(2) மொழியியல்

(3) தனிமனித உறவு சார்ந்த

(4) பொது இடம் சார்ந்த

139. மாணவன் முன்வைக்கும் ஒரு தவறான கேள்விக்கு ஆசிரியை நேர்மைறையான பதில் ஒன்றைத் தருகிறார். இதில் ஆசிரியை வெளிப்படுத்துவது

(1) மாணவனின் எதிர்நிலை உணர்வு வெளிப்பாட்டையும் புரிந்து கொண்டு ஏற்கும் தன்மை

(2) மொழித்திறனை ஊக்குவிக்கும் தன்மை

(3) வெவ்வேறு வகையான கற்கும் முறையை ஏற்கும் தன்மை

(4) புரிதல் திறனை வளர்க்கும் தன்மை

140. உடல் நலக்குறைவு, புலனறிவுக் குறைபாடு, மனநலக்குறைபாடு போன்றவற்றால் ஒரு மாணவனின் கற்கும் திறன் குறையும் போது தேவைப்படுவது

(1) நிவாரணம் அளித்தல்

(2) வகுப்பறை ஏற்பாடு

(3) கலைப்புலம் சார்ந்த கல்வி

(4) சிறப்புத் தேவைக்கான கல்வி

141. மதிப்பீடு செய்வதற்கான விதிமுறை.
(1) மதிப்பீட்டு வழிகாட்டு முறை
(2) கேள்விக்குரிய மதிப்பெண் வழங்கும் முறை
(3) மாணவனின் திறன் குறித்த பொது மதிப்பீட்டுமுறை
(4) மதிப்பீட்டுக் கருவி

142. 'பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம் சால மிகுத்துப் பெயின்' இக்குறட்பாவில் உள்ள அணி
(1) உருவக அணி
(2) பிறிதுமொழிதலணி
(3) உவமையணி
(4) இல்பொருளுவமையணி

143. கட்டமைப்பு முறை கோட்பாடு இங்கு செயல்படுகிறது. மாணவர்கள்
(1) உலகைப்பற்றிய புரிதலையும் அறிவையும் தம் நேரடி அனுபவத்தினூடாக மதிப்பிட்டு உருவாக்குதல்
(2) வேறுபட்ட மாதிரிகளைப் படித்து முறையான முடிவைக் கண்டறிதல்
(3) ஆசிரியரின் உதவியுடன் பல்வேறு ஊடகங்கள் வழியாகக் கற்று ஆய்ந்து தமக்கான கோட்பாட்டை உருவாக்குவதில்
(4) கற்பதற்கான உப கரணங்களைத் தாமே உருவாக்கிக் கொண்டு நேரடி அனுபவத்தை பெறுவதில்

144. ஒரு தகவலில் உள்ள ஒலி, சொல்வகை, உருவவியல் வேறுபாடுகள் போன்றவற்றை அடையாளம் காண்பது அல்லது காணாமல் விடுவது என்பது இந்தச் செயல்பாட்டுடன் உறவுடையது
(1) வாசித்தல்
(2) எழுதுதல்
(3) கவனித்தறிதல்
(4) பேச்சுத்திறன்

145. உள்ளடக்கம் சார்ந்த அணுகு முறை இதனை மையமாகக் கொண்ட கற்பித்தலின் போது நிகழ்கிறது
(1) மாணவர்களின் விருப்பங்கள்
(2) பாடத்திட்டப் பகுதி
(3) ஆசிரியர் பாடப்பிரிவு சார்ந்த அறிவு
(4) கல்வித் தொழில் நுட்பம்

146. தனித்திறமைக்கான அடையாளக்குறிப்பு பொதுவாக இதன் வழியாகத் தெரிய வருகிறது
(1) IQ தேர்வுகள்
(2) EQ தேர்வுகள்
(3) ஆசிரியர்கள் பெற்றோர்கள்
(4) தொடர்ந்த பள்ளிப் பதிவேடுகள்

**147.** பன்னாட்டு நிறுவனங்களின் வேலைவாய்ப்புகள் பற்றிய செய்தித்தாள், பத்திரிகைக் கட்டுரைகளை ஒரு இடைநிலைப்பள்ளி ஆசிரியை மாணவர்களுக்கு வழங்கி வேலை வாய்ப்புக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் தேவை என்பதை வலியுறுத்துகிறார். இது மாணவர்களிடையே தரும் பலன்:

(1) இருமொழிக் குழுக்கள், வலைதளங்களைப் புரிந்து கொள்ளுதல்

(2) வேறு நாடுகளுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை உருவாகி உள்ளதைப் புரிந்து கொள்ளுதல்

(3) உலகமயமான சமூகத்தில் இரு மொழியறிவுடன் இருப்பதன் நன்மையைப் புரிந்து கொள்ளுதல்

(4) வளர்ந்த பின் எங்கே வாழ்வது எங்கு வேலை செய்வது என்பதை முடிவு செய்ய இயல்வது

**148.** கவனித்தல்-பேசுதல் திறன் மதிப்பீட்டுத் தேர்வில் பின்வரும் உரையாடலை எவ்வாறு மதிப்பிடுவீர்கள்.

ஆசிரியர் : டெல்லியில் காற்று ஏன் அதிக புகைமூட்டமாக உள்ளது ?

மாணவன் 1 : புகை மற்றும் தூசு காரணமாகவே பெரும்பாலும் அப்படி உள்ளது.

மாணவன் 2 : எங்கள் ஊரும். அதுவும் புகை மூட்டம் தான்.

(1) மாணவன் 1 தவறான விடை மாணவன் 2 சரியான விடை

(2) மாணவன் 1 சரியான விடை மாணவன் 2 தவறான விடை

(3) மாணவன் 1 தவறான விடை மாணவன் 2 தவறான விடை

(4) மாணவன் 1 சரியான விடை மாணவன் 2 சரியான விடை

**149.** ஒரு பாடப்பிரதியில் உள்ள ஒரு சொல்லின் 'பொருள் மதிப்பு' என்பது

(1) பொருத்தமான இடத்தில் சொல்லை மறைமுகமாக பயன்படுத்தல்

(2) ஒரு சொல்லைப் பயன்படுத்துவதற்கான பல வழிகள்

(3) ஒரு சொல்லுக்கான அகராதிப் பொருள்

(4) ஒரு குறிப்பிட்ட பொருளின் பின்புலத்தில் ஒரு சொல்லுக்குள்ள முக்கியத் துவம்

**150.** ________ மொழிக் கல்வி உண்மையுள்ள பொருள் நிறைந்த பரிமாற்றத்திற்குள் மாணவர்கள் ஈடுபடுவதற்கு கூடுதல் முக்கியத்துவம் தருகிறது

(1) இலக்கண மொழிபெயர்ப்பு

(2) இரு மொழிபெயர்ப்பு

(3) தகவல் தொடர்பு

(4) அலுவல் சாரா

# SPACE FOR ROUGH WORK

**கீழ்வரும் வழிகாட்டுதல் குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும்**

1. பக்கம் 2-ல் ஒஎம்ஆர் (OMR) விடைத்தாளில் உள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய நான்கு விடைகளில் மிகச் சரியான ஒரு விடையை மட்டும் நீலம்/கறுப்புமை பந்துருள்முனைப் பேனாவினால் முழுவதுமாக மைபட்டை தீட்டப்பட வேண்டும்.
2. தேர்வு எழுதுபவர் அவர்தம் விடைத்தாள் மடிந்திருக்கவில்லை என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். விடைத் தாளில் எவ்விதமான அடித்தல் திருத்தலும் செய்தல் கூடாது. விடைத்தாளில் உரிய இடத்தில் மட்டுமின்றிப் பிற எங்கும் தேர்வு வரிசை எண்ணைக் குறிப்பிடக் கூடாது.
3. எச் சூழ்நிலையிலும் (தேர்வு நூற்கட்டு சங்கேதக் குறியீடு/எண்ணும் தேர்வு விடைத்தாள் குறியீடு/எண்ணும் தம்முள் முரண்படும் நிலையில் மட்டுமன்றி) தேர்வு எழுதுபவருக்கு வேறொரு விடைத்தாள் இணை அளிக்கப்படாது. ஆகவே தேர்வு நூற்கட்டையும் விடைத்தாளையும் தேர்வு எழுதுபவர் மிகவும் கவனமாகக் கையாள வேண்டும்.
4. தேர்வு எழுதுபவர் தேர்வு வருகைத் தாளில் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள தேர்வு நூற்கட்டு மற்றும் விடைத்தாள் குறியீடு மற்றும் எண்களை சரியாகப் பதிவு செய்ய வேண்டும்.
5. தேர்வு எழுத அனுமதி அட்டை தவிர மற்றபடி அச்சு/கையெழுத்துக் குறிப்புகள், துணுக்குகள், பேஜர், செல்போன், மின்சாதனம் எதனையும் தேர்வுக் கூடத்திற்குள் தேர்வு எழுதுவோர் கொண்டு செல்லக் கூடாது.
6. தேர்வு மேற்பார்வையாளர் வினவும் போது தேர்வு எழுதுபவர் தம் அனுமதி அட்டையைக் காண்பிக்க வேண்டும்.
7. தேர்வுக் கண்காணிப்பாளர்/தேர்வு மேற்பார்வையாளர் சிறப்பு அனுமதியின்றித் தேர்வு எழுதுபவர் தம் இருக்கையிருந்து வெளியேறக் கூடாது.
8. தேர்வு மையத்திற்குள் நுழைதல், தேர்வு மையத்திருந்து வெளியேறுதல் ஆகிய இரு வேளையிலும் தேர்வு வருகைப் பதிவுத் தாளில் கையொப்பம் இடாமலும், விடைத்தாளை மேற்பார்வையாளரிடம் திருப்பி அளிக்காமலும் வெளியேறக் கூடாது. வெளியேறுகையில் வருகைப் பதிவுத் தாளில் கையொப்பம் இடாத தேர்வு எழுதுபவரின் விடைத்தாள் திருப்பி அளிக்கப்படாததாகக் கருதப்படும். இந்த முறை மீறிய செயலுக்கு உரிய எதிர்வினை மேற்கொள்ளப்படும்.
9. மின் இயங்கு/மின் இயங்காக் கணிப்பான்களுக்கு அனுமதி இல்லை.
10. தேர்வு ஆணையத்தின் அனைத்துவிதமான நடத்தை விதிமுறைகளுக்கும் தேர்வு எழுதுபவர் கட்டுப்படுவது கட்டாயம். முறை மீறிய செயல்கள் மீது தேர்வாணையத்தின் விதிமுறைகள்படி நடவடிக்கை எடுக்கப்படும்.
11. எச் சூழலும் தேர்வு நூற்கட்டும் விடைத்தாளும் தனித்தனியே பிரிக்கப்படக் கூடா.
12. தேர்வு எழுதி முடித்தபின் தேர்வு எழுதுபவர் தம் விடைத்தாளை மேற்பார்வையாரிடம் திருப்பி அளிக்க வேண்டும். தேர்வு எழுதுவோர் இத் தேர்வு நூற்கட்டை உடன் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

**READ CAREFULLY THE FOLLOWING INSTRUCTIONS:**

1. Out of the four alternatives for each question, only one circle for the correct answer is to be darkened completely with Blue/Black Ball Point Pen on Side-2 of the OMR Answer Sheet. The answer once marked is not liable to be changed.
2. The candidates should ensure that the Answer Sheet is not folded. Do not make any stray marks on the Answer Sheet. Do not write your Roll No. anywhere else except in the specified space in the Answer Sheet.
3. Handle the Test Booklet and Answer Sheet with care, as under no circumstances (except for discrepancy in Test Booklet Code or Number and Answer Sheet Code or Number), another set will be provided.
4. The candidates will write the correct Test Booklet Code and Number as given in the Test Booklet / Answer Sheet in the Attendance Sheet.
5. Candidates are not allowed to carry any textual material, printed or written, bits of papers, pager, mobile phone, electronic device or any other material except the Admit Card inside the examination hall/ room.
6. Each candidate must show on demand his / her Admission Card to the Invigilator.
7. No candidate, without special permission of the Superintendent or Invigilator, should leave his / her seat.
8. The candidates should not leave the Examination Hall without handing over their Answer Sheet to the Invigilator on duty and sign the Attendance Sheet twice. Cases where a candidate has not signed the Attendance Sheet a second time will be deemed not to have handed over the Answer Sheet and dealt with as an unfair means case.
9. Use of Electronic / Manual Calculator is prohibited.
10. The candidates are governed by all Rules and Regulations of the Board with regard to their conduct in the Examination Hall. All cases of unfair means will be dealt with as per Rules and Regulations of the Board.
11. No part of the Test Booklet and Answer Sheet shall be detached under any circumstances.
12. **On completion of the test, the candidate must hand over the Answer Sheet to the Invigilator in the Room / Hall.** ***The candidates are allowed to take away this Test Booklet with them.***

**निम्नलिखित निर्देश ध्यान से पढ़ें :**

1. प्रत्येक प्रश्न के लिए दिए गए चार विकल्पों में से सही उत्तर के लिए OMR उत्तर पत्र के पृष्ठ-2 पर केवल एक वृत्त को ही पूरी तरह नीले/काले बॉल पॉइन्ट पेन से भरें । एक बार उत्तर अंकित करने के बाद उसे बदला नहीं जा सकता है ।
2. परीक्षार्थी सुनिश्चित करें कि इस उत्तर पत्र को मोड़ा न जाए एवं उस पर कोई अन्य निशान न लगाएँ । परीक्षार्थी अपना अनुक्रमांक उत्तर पत्र में निर्धारित स्थान के अतिरिक्त अन्यत्र न लिखें ।
3. परीक्षा पुस्तिका एवं उत्तर पत्र का ध्यानपूर्वक प्रयोग करें, क्योंकि किसी भी परिस्थिति में (केवल परीक्षा पुस्तिका एवं उत्तर पत्र के संकेत या संख्या में भिन्नता की स्थिति को छोड़कर) दूसरी परीक्षा पुस्तिका उपलब्ध नहीं करायी जाएगी ।
4. परीक्षा पुस्तिका / उत्तर पत्र में दिए गए परीक्षा पुस्तिका संकेत व संख्या को परीक्षार्थी सही तरीके से हाज़िरी-पत्र में लिखें ।
5. परीक्षार्थी द्वारा परीक्षा हॉल/कक्ष में प्रवेश कार्ड के सिवाय किसी प्रकार की पाठ्य सामग्री, मुद्रित या हस्तलिखित, कागज़ की पर्चियाँ, पेजर, मोबाइल फोन, इलेक्ट्रॉनिक उपकरण या किसी अन्य प्रकार की सामग्री को ले जाने या उपयोग करने की अनुमति नहीं है ।
6. पूछे जाने पर प्रत्येक परीक्षार्थी, निरीक्षक को अपना प्रवेश-कार्ड दिखाएँ ।
7. अधीक्षक या निरीक्षक की विशेष अनुमति के बिना कोई परीक्षार्थी अपना स्थान न छोड़ें ।
8. कार्यरत निरीक्षक को अपना उत्तर पत्र दिए बिना एवं हाज़िरी-पत्र पर दुबारा हस्ताक्षर किए बिना परीक्षार्थी परीक्षा हॉल नहीं छोड़ेंगे । यदि किसी परीक्षार्थी ने दूसरी बार हाज़िरी-पत्र पर हस्ताक्षर नहीं किए तो यह माना जाएगा कि उसने उत्तर पत्र नहीं लौटाया है और यह अनुचित साधन का मामला माना जाएगा ।
9. इलेक्ट्रॉनिक / हस्तचालित परिकलक का उपयोग वर्जित है ।
10. परीक्षा-हॉल में आचरण के लिए परीक्षार्थी बोर्ड के सभी नियमों एवं विनियमों द्वारा नियमित हैं । अनुचित साधनों के सभी मामलों का फैसला बोर्ड के नियमों एवं विनियमों के अनुसार होगा ।
11. किसी हालत में परीक्षा पुस्तिका और उत्तर पत्र का कोई भाग अलग न करें ।
12. **परीक्षा सम्पन्न होने पर, परीक्षार्थी कक्ष / हॉल छोड़ने से पूर्व उत्तर पत्र कक्ष-निरीक्षक को अवश्य सौंप दें ।** ***परीक्षार्थी अपने साथ इस परीक्षा पुस्तिका को ले जा सकते हैं ।***